ஓம் சுத்த சக்தி.

# பைந்தமிழ்ச் சோலை.

(அன்பு மலர்—க.)

ஆக்கியோர்:

## சுவாமி சுத்தானந்த பாரதியார்.

முதற் பதிப்பு

(உரிமை பதிவு செய்யப் பெற்றது)


அன்பு நிலயம்,
11, டாங்க் ரோட்டு,
சிங்கப்பூர்.

யுவ-ஹூ மாசி-மீ
1936.

விலை காசு 20.] [விலை அணா 4.

ஓம் சுத்த சக்தி.

# போற்றி புதுத்தமிழரசி.



உள்ளத் துடிப்பே, யுயிர்க்கனலே, பேரின்ப
வெள்ளம் விளைகனியே, விண்ணமுதே யென்றயே!
வேந்தர்களும், வீரர்களும், வித்தகரும் போற்றிசெய
மாந்தர்மன மெல்லாமுன் மந்திரமாய்க் காணேமோ!

சுத்தானந்த பாரதி.

ஓம்

சுத்தசக்தி.

# பைந்தமிழ்ச் சோலை நிவேதனமாலை.

## தமிழ்த் தாய் வாழ்த்து.

இராகம் பியாகு.] [தாளம் ஆதி.

### பல்லவி.

எங் தாய் வாழ்கவே!
எங் தாய் வாழ்கவே!

### சரணங்கள்.

வந்தனை செய்பவர்
சிந்தை குளிர்ந்திட
சந்தத மின்ப—ந
லந்தரு சுந்தரி ... எந்தாய்!

தேனினும், பாலினும்,
வானமு தத்தினும்,
கான ரஸம்பொழி
ஞான கலாநிதி ... எந்தாய்!

## தமிழ்த்தாய் வாழ்த்து.

நித்திய சுத்த—ஸ
மத்வ சுதந்திர
ஸத்ய தர்ம—ஜ
யத்வஜ ரக்ஷகி ... எந்தாய்!

பூதல மானிடர்
தீதற வோங்கிட
பேத மிலாப்பொது
நீதி செலுத்துவள் ... எந்தாய்!

பூரண யோகமும்,
பூரண போகமும்,
வீரமுந் தீரமும்,
பேரன்பர்க் கீந்தருள் ... எந்தாய்!

மண்ணக வாழ்வினில்
விண்ணமு தூறிடத்
தண்ணருள் பெய்யுமுக்
கண்ணன் பராசக்தி ... எந்தாய்!

---

சுத்தானந்த பாரதி.

ஓம் சுத்த சக்தி.

# சுவாமி சுத்தானந்த பாரதியார்



தமிழெனும் தண்ணமுதை யுண்ணுவோம்!-பெற்ற
தாயின் பெருமைகளை எண்ணுவோம்!
தமிழை யுயிரினுங் கொண்டாடுவோம்!—இளந்
தமிழர் தமிழுயர்வை நாடுவோம்!

சுத்தானந்த பாரதி.

ஓம் சுத்தசக்தி.

# புதுத் தமிழரசி.

———:o:———

## தேவியின் திருக்கொலு.

(குறவஞ்சி மெட்டு)

வெற்றிமுர சொலித்திடுவோம்,
வீரர்களே வாரீர்!
விழித்தெழுந்தாள் சக்தியன்னை
செழித்ததவச் சுடராய்;
அற்றதிருள் வறுமைதுயர்
அச்சமினி யில்லை;
ஆற்றலமிகத் தந்திடுவாள்
கூற்றினையும் உதைப்பாள்!

கள்ளவிழும் பூந்துகளை
அள்ளிவருந் தென்றல்,
கனிவிருந்துண் டிசையெடுக்கும்
கட்டறியாப் புட்கள்,
ஒள்ளியநல் லோடைகளின்
தெள்ளிய ஓங்காரம்,
ஓதிடவே நாதமறை
சோதிவரு கின்றாள்!

அருள்பழுத்த பழச்சுவையின்
அரியகனி மொழியாள்!
அருவியெனக் கவிதருவாள்,
அன்புமலர் சொரிவாம்!

இருளரக்கர் நடுநடுங்க
இடிமுரச மார்த்தாள்,
இன்னியர்வாழ் வமுதுகக்கப்
புன்னகையை வார்த்தாள்!

சாதிமத பேதமற
நீதிபுரி யரசி,
சமதர்மக் கொடியுயர்த்தி
சத்தியக்கோல் பிடித்தாள்;

ஆதிசிவ சக்தியவள்
அறிவணையில் வீற்றாள்;
அருளனலுந் திருவிழியால்
கருணைவளம் பொழிவாள்!

கண்ணன்குழல் கேட்டுருகக்
கந்தன்மயி லாடக்
காவிரியாழ் மீட்டுகின்றாள்
கலைகளெலாம் பணிய;

தண்கடல்பல் லாண்டிசைக்கத்
தாங்குகின்றாள் உலகைத்
தளிரியற்கைப் பச்சழகி,
தமிழரசி எந்தாய்!

திருவைகை பருணியொளிர்
சிலம்படியி னருகே,
திகழுகின்ற திலங்கையன்னந்
தவழுகின்ற தின்பம்;
* இருவரைகை லாகுதா,
இளமணக்கால் வீச,
எங்களன்னை விளங்குகின்றாள்;
மங்களச்சங் கொலிப்போம்!

வரங்களெல்லாம் வழங்குகின்றாள்;
கரங்களெல்லாம் குவிப்போம்!
வாழிபரா சக்தியென்று
மந்திரங்கள் ஜபிப்போம்!
சிரங்களெல்லாம் ஒற்றுமையாய்ச்
சேர்ந்துவழி படுவோம்!
திக்கெல்லாம் எதிரொலிக்க
ஜயகோஷம் புரிவோம்!!
எந்தாய் வாழ்க!

சுத்தானந்த பாரதி.

---

* மேற்குத் தொடர்ச்சி-கிழக்குத் தொடர்ச்சி மலைகள்.

ஓம் சுத்த சக்தி.

தமிழர் பெருமை தமிழ்ப்பெருமை; யன்பார்
தமிழ்ப்பணியே யின்பத் தவம்.

சுத்தானந்த பாரதி.

ஓம் சுத்த சக்தி.

# தமிழன்பு.

———:O:———

க.

தமி ழுயர்ந்த தனிமொழி யென்றே
  தமுக்க டிப்பதிற் சாரமொன் றில்லை.
அமிழு திந்த வருங்கலைக் கப்பல்!
  அறிவு மாற்றலும் ஆண்மையும் வீரமுங்
கமழும் வாலிபக் காளைகள் வம்மின்,
  கப்ப லைக்கரை சேர்க்க விரைந்தே!
குமிழ்கி ளம்ப முழுகிய பின்னர்
  கூச்ச லிட்டுக் குணமொன் றுமில்லை.

உ.

கல்விச் சாலைகள் காணுமின் கோடி!
  கலைமக ளாக்க ருத்தில் வளர்மின்!
நல்ல கைத்தொழில் கோடி நயந்தே,
  நல்கு ரவைந வித்திட வம்மின்!
செல்வி புன்னகை செய்தினி தோங்குஞ்
  சித்திரத்திரு விண்ணகச் சோலை,
எல்லை யற்ற தமிழக மென்றே,
  இயற்ற வேண்டு மினந்தமி ழன்பா!

௩.

பண்டைச் சீரெனும் பஞ்சணை மீது
படுத்து றங்கிப் பயனொன் றுமில்லை!
அண்டை யிந்தியும் வங்கமு மன்னைக்
காற்று நற்பணி யாதெனப் பாரீர்!
சண்டை சச்சர வின்றியுள் ளொன்றி,
ஸமதர் மக்கொடி தாங்கி விரைமின்!
தொண்டு செய்வந் துறைபல நாடித்
துலங்க நற்றமிழ்ச் சோதி யுலகில்!

௪.

எழுத வல்லோ ரெழுதி வணங்கீர்!
இசைப் புலவர் இசைத்து வணங்கீர்!
பழுதி லார்கள் பணியின் வணங்கீர்!
பணச் செழியர் பசும்பொன் னுதவீர்!
தொழிற் புலவர் தொழிலின் வணங்கீர்!
சோம்பி இன்னமுந் தூங்கிட லாமோ?
தொழுத ருந்தொண்டு செய்தமி ழன்பா!
துணிந்த வீரர் துலங்குவர் வெற்றி!!

சுத்தானந்த பாரதி.

ஓம் சுத்த சக்தி.

# முன்னுரை.

எந்தாய் தமிழரசி வாழ்க! நீளிரவு கழிந்தது. பொழுது புலர்ந்தது. எனினும் தமிழகம் மட்டும் இன்னும் விழித்திலது. அன்னை நாற்புறமும் நோக்கி, தான் ஓவியமாய் ஊட்டி வளர்த்த கம்பனை யும், வள்ளுவனையும், இன்னும் ஏனைய கண்மணிச் சேய்களையும் பரிவோடழைக்கிறாள். மழலைகளின் குழலிசை கேட்டிலது; சேய்கள் சென்றவிடந் தெரி யவில்லை; அம்மை சோகுறுகின்றாள். பின்னர் திட னெய்தி, 'நான் மலடல்ல; இன்னும் எத்தனையோ மைந்தர்களைப் பெறவுள்ளேன்', என்று நினைந்து நினைந்து, உவகைக் கனலெழ உள்ளம் விம்முகிறாள்; முகத்தில் பளிச் சென்று ஒரு மோகன முறுவல் காந்துகிறது. அம்மோகன ஒளியின் மஹா மந்திர சக்தி தமிழகத்தில் பல அருட்குயில்களை மீண்டும் படைத்து விடுகிறது. அத்தகைய அருட்குயில் ஒன்றின் இதயப் பொய்கையில் அரும்பிப் பூத்த இலக்கியப் பங்கயமே இப் பைந்தமிழ்ச் சோலை. இத்தேன் மலராகிய நாண் மலரை தமிழம்மையின் திருவடிகளில் அன்புநிலயம் இன்று சாத்துகிறது. தேவி ஏற்றருள்புரிக!

இந்நூலின்கண் தமிழின் பெருமை, உலக மொழிகளிடையே தமிழுக்குரிய இடம், தமிழின் பிறப்பு, வளர்ச்சி, தமிழணங்கின் காட்சி, தமிழ்ப் பெரியார் திருவுள்ளம், இன்றைய உலகில் தமிழ், தமிழர், தமிழ்நாடு சீர்பெற்றோங்க நாம் செய்ய

வேண்டிய பணிகள், கவிதை, இலக்கியம், இசை, சிற்பம், ஓவியம், தொழில்கள், வாணிபம், அரசியல், இல்லறம், பொதுநல வாழ்வில் தமிழர் சிறந்தோங்கும் வழி, தமிழ்-மந்திரம் அமைப்பு முதலிய பல அரிய பொருள்களைக் காணலாம்.

இந்நூலாசிரியர் சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள் ஓர் அரிய தவயோகி. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் பல பயனுள்ள நூல்களை இயற்றியுள்ளார். அல்லும் பகலும் அயராது, அடக்கமாகத் தமிழ்ப்பணி புரிவதில் சிறந்தவர். இவர் கவிகளில் இயலழகும், அருட்பொலிவும், பொருட்செறிவும், இனிமையும், தெளிவும் ஆவேச கங்கையெனப் பொங்கிப் பொசிவதை, இவர் பாடியுள்ள—வருங்காலத் "தமிழோபநிஷத்", எனத் தகும்—பாரத சக்தி, தர்ம ஸாதனம், முதலிய நூல்களில் மாண்புறச் சுவைத்து அனுபவிக்கலாம். இந்நூலையும், இதற்கடுத்து வெளியிட ஸ்ரீராமலிங்க விஜயம், கம்பக்கவியின்பம், முதலிய நூல்களையும் அன்போடு எழுதி உதவிய சுவாமி அவர்கட்கு அன்பு நிலயம் மெய்நன்றி செலுத்துவதோடு, அவர்களை என்றென்றும் தன் உள்ளன்புக் கோயிலில் வைத்து வணங்கத் தவறாது.

இந்நூலை வெளியிட உள்ளன்போடு பொருளுதவிய பல நல்லன்பர்சட்கும், இதற்காக ஸ்ரத்தையுடன் உழைத்த தமிழன்பர் ஸ்ரீமான் திருமருகல் சு. மு. ரெத்தினஸாமி அவர்கட்கும், அன்பு நிலயம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுளது.

முதலில் தமிழ் மொழிக்கரசியாக விளங்குதற்கேற்ற அரிய பெரிய இலக்கியங்களை, அன்பு நிலயம் வெளியிடத் தொடங்கியுள்ளது. தமிழரிடையே அறிவு வளர்ச்சி, அன்பு மலர்ச்சி, ஆன்ம நேய வொருப்பாட்டுணர்ச்சி, பொதுநல வீரம், ஒற்றுமை, மொழிப்பற்று, நாட்டன்பு, ஆருயிர்ப்பணி முதலிய நல்ல தன்மைகள் பொலிவெய்தி, தமிழும், நாடும் உலகில் எல்லாத் துறைகளிலும் சிறப்புறச் செய்வதே அன்புநிலய வெளியீடுகளின் கருத்து. தமிழ் நலங் கருதுவோர் இந்நூலை ஆதரிப்பாராக. தமிழம்மையின் திருவருள் எம்மை முன்னின்று நடத்துக! ஓம் சக்தி!

15-2-1936
சிங்கப்பூர்.

அன்பு நிலயம்.

ஓம் சுத்த சக்தி.

# பொருளடக்கம்.


எண். பக்கம்.

(i). முன்னுரை: ...

பாட்டுகள்:

பைந்தமிழ் நிவேதனமாலை

புதுத்தமிழாசி

தமிழன்பு

படங்கள்:

தமிழம்மை

ஆசிரியர்

க. சோலை வளம் ... க.

உ. சோலை செழிக்க வேலை .... ருசு.

தாய் மொழியுந் தன்னறமுந்
தாய் நாடுந் தண்ணருளும்,
வாய்மையறி வின்பொளிர வாழ்!

சுத்தானந்த பாரதி.

ஓம் சுத்தசக்தி

# பைந்தமிழ்ச் சோலை.

## க. சோலைவளம்.

தாய்மொழி பேணுக !
தாய்ப்பணி புரிக !

ஆங்கில நெய்தற் சோலையில் உலவினேன். சேகசிற்பியாரின் கூத்திலக்கியத்திற் குளித்தேன். அமலாதி தன் நெஞ்சோடு கிளத்துவதும், லியர் மன்னன் சுற்றம் முனிவதும், கார்தினல் உல்ஸி தான் மன்னர் சேவை செய்த வீணாட்களுக்கு இரங்குவதும், சதி வாள் முனையில் யூலிய கேசரி முடியுங் காட்சியும், அந்தோனியின் அமைதியான கூர்மொழித்திறமும், உரோமியனின் உண்மைக் காதலும், என் எதிரே நின்று பேசின. கடலினும் ஆழ்ந்த கருத்துக்களும், மலையினும் உயர்ந்த மாண்பும், இளவேனிலின் இனிய நடையழகும், பொருட் செறிவும், கதை நுட்பமும் என் நெஞ்சைத் தம் வயப்படுத்தின. "எழுமின்! விழிமின்!" என்று மில்தன்

பாடிய "இழந்த விண்" என்னைத் தட்டியெழுப்பியது. காட்டில் களிப்பையும், தனிமையில் இனிமையும், கடலின் ஓசையில் கட்டில்லாப் பாட்டையும் உணர்ந்து, மக்களிடம் அன்பிற் குறையாது, இயற்கையிடம் பேரன்பு பாராட்டும் பைரன் இத்தாலியாவையும், கிரேக்க நாட்டையும், அவற்றின் பழம் புகழையும், தற்போது அவற்றிற்குற்ற தாழ்வையும் உருகிப் பாடிய உயர்ந்த அடிகள் என் எண்ணங்களைத் தீட்டிக் கூராக்கின. "ஏழை மனிதனே! கொடுங்கோலின் அரியணை உனது தளர்வின் மீதே எழும். அத்தளர்வை மறந்து, கடவுள் பணித்த உயர் பணியைப் பொறுமையுடன் செய்," என்னும் வேத்ஸ்வர்த்தின் இயல் வளஞ் சிறந்த பாக்கள் எனது நெஞ்சை அள்ளின. இன்னும் கீத்ஸ், ஷேல்லி, ஈட்ஸ் முதலிய காவிய வீரரின் தெளிவும், அதிஸன், ஸ்தீல், மெகாலே, ஸ்காத் போன்றோரின், இணையற்ற உரை நடைகளும் என்னுள் இன்பத்தைப் பாய்ச்சின. ஆங்கில இலக்கியச் சோலையில் எல்லா நாட்டுப் பெரியோரும் கவிகளும் மகிழ்வதைக் கண்டேன். ஆவேசக்கன்னி ழாந்தார்க் (Jean d' Arc) நிலவிய பிரெஞ்சு நாட்டின் இனிய திராக்ஷாவனத்தில் உலவினேன். கொர்னெல், பாஸ்கு, லாஃபோந்தன், மோலியர், வால்தேர், ரூஸோ, வித்தர் ஹ்யூகோ, அனதோல் ப்ரான்ஸ், ரோமென் ரோலாந் முதலிய இலக்கிய

நறுமலர்களில் மதுவண்டெனச் சுழன்றேன். கிரேக்க நாட்டுக் கவியரசான ஹோமர் "நாட்டினர்களே! பொறுமின்! ஒருவரையொருவர் கொல்லுவதினின்று உங்கள் வெறிபிடித்த கைகளை நீக்குமின்! அமைதி வருகிறது," என்று தன் இலியாதை, பாடி முடிக்கிறான். மோலியர், ஷில்லர், கெதே, தாந்தி, வர்கிலியன், காளிதாஸன், தாகூர், இன்னும் உலகின் இளவேனிற் சோலைக்குக் குயில்களாக விளங்கும் பாவலரெல்லாம் ஆங்கிலச் சோலையை அணியுறுத்தி நிற்கின்றனர். அறிவு நூலார் 'தம்மதே உலகு', என்னும் பெருமையுடன் உலவுகின்றனர். உலகின் அறிவும், தொழிலும், அனைத்தும் அடங்கி இன்னும் விரிந்த இந்த நெய்தற்சோலையில் மயங்கி என்னையே மறந்தேன். ஆங்கிலமாது வாகை புனைந்து தானே மொழியரசி யென்னும் செல்வச் செருக்குடன், பிறமொழிகளெல்லாம் தனக்கு நடைபாவாடை விரிக்கப் புலவர் விழித்தாமரை பூத்த கவித்தடத்தில் அரச அன்னம்போல் நடக்கின்றனள்! அவள் அணிந்த பாமாலைகளின் இயல்மணமே என் காற்றுப்பையை நிறைத்தது. இந்த நெய்தற் சோலையில் என் நெஞ்சம் வேரூன்றியது. பிரெஞ்சுக் கலை நிலையம் என் வியப்பைச் சிலையாக்கியது.

இவ்வாறு ஆழ்ந்த நெஞ்சை ஒரு நறுமணச் சிறுகால் அழைத்தது. எப் பூவினின்று அந்த மணம் வருகிறதென்று அறிய ஆவல்கொ

ண்டு சென்றேன். ஆ! திருக்குறள் என்ற வாடா மலரன்றோ அத் தென்றலை ஊட்டியது! அத் தேன்மலர் என்றும் நாண்மலராய் விளங்குகிறது. அந்த அறமாதின் நறுமணி மலரைக் கண்ணிலொற்றிப் புண்ணிய மெய்தாப் புவியினர் இல்லை. எந் நாட்டாரும் தம் நாட்டு மணிமொழிகளில் ஆக்கி நுகரும்என் தெய்வத் தமிழின் சிந்தாமணியான திருக்குறளைக் கண்டதும் தாய்மொழி யன்பு ததும்ப, தமிழையும், தமிழரையும், தமிழ் நாட்டையும் எண்ணினேன். ஆங்கில அரசிக்குக் குறையாத பெருமையுடன் எனது தமிழ்த் தாய் ஒரு காலத்தில் உலவிய திருவை எண்ணி உருகி எனது நெஞ்சு அன்பாலும் நன்றியாலும் நிறைந்தது.

## தமிழே, தமிழே!

தமிழே, தமிழே! தமிழர்க் குயிரே!
அமுதே; யழகே; யன்பே யருளே!
சங்கரன் போற்றிய சங்கத் தமிழே!
மங்கலம் பொலியு மாமணி விளக்கே!
பாண்டியன் வளர்த்த பச்சிளஞ் செல்வி!
வேண்டிய வளங்கள் ஈண்டியதிருவே!
பொதிகைத் தென்றலும் பொன்னியும் வையையும்
எதுகை மோனையோ டேத்திடுந் தமிழே!
செவிக்கினி தாகிய கவிக்கனி குலுங்கும்
புவிக்கினிதாகிய புண்ணியத் தமிழே!

சித்தர் பாடிய சித்திரத் தமிழே!
புத்தொளி பரவும் பூரணத் தமிழே!
முருகன் மொழிந்த முழுநிறைத் தமிழே!
அருகர் புத்தர் கிருத்தவர் இஸ்லாம்
மதத்தின ரெல்லாந் துதித்தநற் றமிழே!
மதவரை கடந்த பொதுமறைத் தமிழே!
பனிவரை யுச்சியிற் படம் விரி தமிழே!
முனிவர்கை தவழ்ந்த மோகனத் தமிழே!
இயலிசை நாடக வியற்கைத் தமிழே!
குயிலிசை கைக்குங் குரலிசைத் தமிழே!
தன்னிகரில்லா நன்மொழித் தமிழே!
பன்மொழி படைத்த தென்மொழித்தமிழே!
தென்பா லப்பன் சின்முத் திரையில்
தன் பொருள் விளக்குந் தத்துவத் தமிழே!
அணியார் மொழியே! அருளா ரழகே!
மணிமருந்தாகு மந்திரத் தமிழே!
இதயக் கடவுளை யிலக்கிய தமிழே!
பொது நிலை நடனம் புரிபர மேசன்
காதல ருள்ளப் போதலர் தமிழே!
மாதவ னன்பர் ஓதிய தமிழே!
உலகெலாம் ஓதற் குரியநற் றமிழே!
அலகிலா விளையாட் டரனுவந் தாடிய
பண்ணார் தமிழே! விண்ணார் தமிழே!
கண்ணினு மருமைக் கண்மணித் தமிழே!
சொல்லச் சொற்சுவை சொட்டுந் தமிழே!
எல்லையில் விரிவு நல்கு செந் தமிழே!
துலக்கரு நுட்பக் கலைக் களஞ்சியமே!
கலைக்கரு நுட்பக் கடவுட் டமிழே!

வெற்றிவேல் பிடித்த வீரத் தமிழே!
கொற்றவர் முடிமணி கொண்டநற்றமிழே!
வானுற வோங்கி வாழ்க நின் பெருமை!
மானிடத் தேவர் வழுத்துக நின்னை!
தெள்ளறி வன்புத் தேறலே, யுலகின்
உள்ளறி வன்பின் உயிர்த்துடிப் பாவாய்!
வானும் புவியும் வாழ்த்துக நின்னை!
வானைப் புவியில் வளர்த்தகற் பகமே!
முன்னிசையுடனே பின்னி யிலகி
யின்னு மின்னு மிசை பெற வாழி!

என்று என்னுள்ளம் விம்மியது! என்னைப் பெற்று வளர்த்துத் தாலாட்டிச் சீராட்டி யறிவூட்டிய தமிழே எண்ணமானேன். தமிழ் நாட்டின் உயர்ந்த நாகரிகமும், தமிழ் மைந்தரின் கல்வியும், செல்வமும், வீரமும், என் கண்முன் பொலிந்தன. மார்க்கபோலனேடு என் மனமும் தமிழ் நாட்டின் திருவில் தவழ்ந்தது. பாண்டியன் கோலும் பாவலர் திறமும், முச் சங்கத்தின் முந்திய சீரும், "அரனே நின்போல் இரந்துண்டு வாழோம். நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே!" என்று அரனையும் தாக்கிய அஞ்சாப் புலவனுன நக்கீரர் வீற்றிருந்த சங்கத்தின் தலையும், சங்கப் பலகையில் தொட்டி யொடிய கண்டமிழ் நூல்களும், "துறைத் தோணி நின்றுலாம் தூங்கு நீர் சேர்ப்ப," என்று புகழேறிக் கடலரசாக விளங்கிய

பாண்டியனின் வாணிபச் சிறப்பும், என் முன்னே விளங்கின. ஔவையும், வள்ளுவரும், கம்பரும், அப்பரும், மாணிக்கவாசகரும், ஆழ்வார்களும், அருள் வள்ளலாரும், எனது நரம்புகளில் நல்லிசை மீட்டினர். நச்சினார்க்கினியர் ஆராய்ந்த பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், அடியார்க்கு நல்லார் அகன்ற உரை எழுதிய, அழகிற்கழகு செய்யும் சிலப்பதிகாரமும், திருத்தக்க தேவரின் சிந்தாமணியும் எனது அறிவைக் கொள்ளை கொண்டன. தங்கள் நாகரிகத்தையும், வாணிபத்தையும், தொழிலறிவையும் கொண்டு, தமிழர் கப்பலூர்ந்து, கடலளந்து, துறையளந்து, பலநாடுகளுக்கும் தீவுகளுக்கும் சென்றதும், யவனர் தமிழ் நாட்டுப் பெண்களின் தோழியராகக் குலாவியதும், வடுகரும் கொங்கணரும், கன்னடரும், தமிழைத்தாயென வணங்கியதும், சேரசோழபாண்டியரின் செங்கோற் சிறப்பும், வீரப்பொலிவும், என்னைப் பெருமைப்படுத்தின. சுருக்கமாகத் தமிழின் இனிப்பும், தமிழரின்வீரமும், தமிழ்நாட்டின் வளமும், என்னைத் தமிழ்மணம் கமழும் தென்றலாக வந்து அழைத்தன. அத்தென்றல்வயப்பட்ட யான் என்னைப் 'பைந்தமிழ்ச் சோலை' யுட் கண்டேன்.

# பண்டைத் தமிழகம்.

பைந்தமிழ் சோலையின் ஒரு பங்கைக் கடல் விழுங்கியதைக் கண்டு வருந்தினேன். தென் கடல் 250 லட்சம் சதுர மைலுள்ளது; இதில் சுமார் 7000 மைல்களுக்கு மேல் விரிந்த ஒரு பெருநில மிருந்தது; அதுவே குமரிநாடு! அது கிழக்கே சந்தாத்தீவுகளினின்று மேற்கே மடகாஸ்கர் வரையிலும் விரிந்திருந்தது. W. Scott Elliott (ஸ்காட் எலியாது) என்பார் அதையே Lost Lemuria (மறைந்த இலெமூரியா) என்று ஆராய்ந்தார். இதுவே பண்டைத் தமிழர் நிலம்; இதுவே முதல் முதல் மனிதர்உண்டான நிலம். இந்நிலத்தைக் கடல் பிட்டு விழுங்கியது. அதனுடன் எண்ணிறந்த அரிய தமிழ் மணிகளும், தமிழறிவு நூல்களும் விழுங்கப் பெற்றன. இந்தக் கடல் தமிழை யுண்டதனாற் போலும் தமிழ் முனி கடலையுண்டார்! இக்குமரி நாடு உலக நடுவிலமைந்து தமிழரசியின் பொன்னணையாக விளங்கிற்று. இதன் நடுவே இமயத்தை யொத்த ஒரு பெரிய மலைத்தொடர் நிவந்திருந்தது. அதுவே மகேந்திரம் அல்லது குமரி மலை என்பது. இதன் மருங்கேதான் பொன்னிலங்கை யிருந்தது. அதனிடைப் பிறந்தது பஃறுளியாறு. இப்பெரு நிலம் 49 நாடுகளாகப் பிரிக்கப் பட்டது. குமரிகண்டம், பஃறுளியாறு முதலியவற்றின் உண்மை,

ஆராய்ச்சி யாளர் உரையாலும் அடியில்வரும் மேற்கோள்களாலும் அறியப்படும்:—

"அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக்‸கையு மிமயமுங்கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன்வாழி!"
(சிலப்பதிகாரம்)

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

தொல்காப்பியர் தமிழெல்லையாகக் குறிக்கும் தென்குமரி குமரிமலையையே. இப்போதுள்ள குமரிமுனை அப்பெரிய குமரித்தாயின் ஒரு விரல் நுனி போன்றது. இப்போதுள்ள தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளவம் ஆகிய தமிழ் வழி வந்த மொழி நிலங்களிலெல்லாம் தமிழரசியின் ஆட்சியிருந்தது. இம்மொழிகள் தங்கள் தாயான தமிழுடன் பிணங்கி வடமொழிக்கு இணங்கி நிற்கின்றன. 300 ஆண்டுகட்கு முன்னர் எழுத்தச்சனால் வரிவடிவுற்றுத் திருந்திய மலையாளம் இன்று வடமொழி யிலக்கணத்தைத் தழுவி நிற்கிறது. நூற்றுக்கு எழுபத்தைந்து தமிழ் விராவிய கன்னடம் அவ்வாறே வடமொழியைப் புல்லிப் புதுக்கன்னட மாயிற்று. தமிழின்றி

அமையாத வடுகும் நன்னயபட்டர் போன்றோர் முயற்சிகளால் வடமொழியைத் தழுவி இலக்கணம் அமைத்துக்கொண்டது. வடுகிற்குத் தாய் வண்டமிழ் என்பார் மிகச்சிலர் இன்றுமுளரெனினும் வடமொழிக்கே அப்பெருமை தருவோரே மிகுதி. இப்படித் தானீன்றமைந்தரே தனக்கு எதிர்செய்து ஒருபால் விலக, மற்றொருபால் கடல் விழுங்க, இன்னொருபால் இன்று புகுந்த புது மொழிப் புயலூடும், தமிழ்த்தாய் தனது இளந்திரு மேனி வாடி நிற்கின்றனள். எனினும் இன்றும் அவளுடைய திருமுகம் அன்று பூத்த நாண் மலர்போன்றுள்ளது; தனக்கியல்பான வீறு குன்றவில்லை.

தாயே! நின்னாடும் குறுகியது, நின் மைந்தருங் குறுகினர்! நின்னுடலுங் குறுகியது; எனினும் நின் முகம் நிறை முகம்; நின்னுயிர் நிறையுயிர். அமுதக்கனி பழுக்கும் அழகுக் கற்பகமே! நின் திருவகத்தில் உம்பரும் இம்பரும் கடவுட் கன்னியரும் உலகின் அணி நடைப்பாவையரும் இன்ப நடம்புரியக் காணும் எனது காட்சி வீணா! வீணா! இல்லை இல்லை! "யான் எனது தந்தை சிவனைப் போலச் சிதை வற்றவள்; சிவப்புதல்வி; என் மைந்தர் ஆன்ம வீரர்! அவர்கள் அதோ அறிவொளி விளக்குகள் போல நிகழ்காலத் திரைக்குப் பின்னிருந்து வருகின்றனர்,

காணுய்," என்று காட்டுகின்றனே! அன்னே அன்னே! நின் பொன் முறுவலிற் பூத்த அமுத மொழிகள் புத்துயி ரீந்தன! நின் கண்ணொளிரும் காட்சி வாழ்க! நீ மொழி யரசியாக ஆட்சிபுரிக! அருளும், பொருளும், அழகும், அன்பும், அறிவும் ஆற்றலும், பெருகி உன் அருமை மக்கள் விழித்தெழுந்து ஆண்மவீரராகச் செழித் தெழுந்து சிறப்பு றுக! அன்று திருத்தொண்டர் இன்று தமிழ்த்தொண்டராக வருக! தாயே, உனது அறிவொளி உலகின் உள்ளத்தை இன்ப விளக்காக்குக! சாகாக் கலையின் நிலயமே, உன் மைந்தர் உள்ளும் புறமும் ஒளி நிறைவாகி இறவாப் பிறவா வாழ்வெய்தி அருட்பெருஞ் சோதி மணிவிளக்குகளாக நிலவுக!

---

## தமிழிலக்கியச் செல்வம்.

இன்று தலைநிமிர்ந்து ஒய்யாரமாக நடக்கும் ஆங்கிலவரசி பிறக்கு முன்னேயே, அவள் போன்ற பல அரசிகளுக்கு அரசியாய் விளங்கியது நமது தமிழ். ஆயிரம் பங்கு திறமை வாய்ந்த சேகசிற்பியார்களே நமது தமிழ் அன்னை என்றனள். சரித்திர வாராய்ச்சிக்கு முன்னரே தமிழாராய்ச்சி தழைத்தோங்கியது. தமிழ் இலக்கியங்கள் பல பிறந்த பிறகே பல நூற்றாண்டுகட்குப் பின்னர் அகத்

தியர் இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பினர். தமிழ், கடவுளைப்போல் ஒருவ ரால் பெறப்பட்டதன்று. அது முதல் இறுதியற்றது. பரம்பொருளினிடமிருந்து வந்து பரம்பொருளை விளக்கி, நம்மைப் பரம் பொருளிடமே சேர்க்கும் அருள்வலிவுடை யது; இறைவன் போன்றே எல்லையற்றது; கடலால் விழுங்கப்பட்டும், நெருப்பால் எரிக் கப்பட்டும், ஆற்றில் ஆழ்த்தப்பட்டும், அழி யாது என்றும் இளமையாக இலகுவது. தமிழ் எல்லாம் வல்லது. தன்னை அண்டிய அன்பருக்குப் பயிலப்பயில அமுதினும் இனி யது.

இவ்வருமைத் தமிழ் முற்காலத்தில், முதற் சங்கக் காலத்தில், அகத்தியரும், அரனும், முருகவேளும், முடிநாகராயரும், நிதியின் கிழவனுருமாகிய 549 பேர்களால் 4440- ஆண்டுகள் அருமையாக வளர்க்கப்பெற்று, காய்ச்சினவழுதி முதல் கடுங்கோனீறாக எண்பத்தொன்பது மன்னர்களால் ஆதரிக் கப்பட்டு, பரிபாடல், முதுநாரை, முதுகுருகு களரியாவிரை முதலிய அருமையான பாடல் களை ஈன்று பொலியும்போது, அந்தோ, கடலால் விழுங்கப்பட்டது. பின்பு இடைச் சங்கம் எழுந்தது. அகத்தியர், தொல்காப் பியர், இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, வெள்ளூர்க்காப்பியன், சிறுபாண்டரங்கன்,

திரையன்மாறன், துவரைக்கோமான், கீரந்தையார் முதலிய 59 அறிஞர் போற்ற, 3700 பாவலர் பாட 59 மன்னரால் (வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறனீறாக) மதிப்புடன் வணங்கப்பெற்று 3700-ஆண்டுகள் பொலிந்து, அகத்தியமும் தொல்காப்பியமுமோதி, கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை யகவல், மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம் முதலிய பல நூல்களை யீன்று கபாடபுரத்திற் பொலிந்து மீண்டும் கடலுள் மறைந்தது. எல்லாத் துறைகளிலும் விளங்கிய எண்ணிறந்த நூல்களுடன், எண்ணிறந்த புலவருடன் பரந்து விரிந்து கலைக்கடலென்ன உலகம் புகழுந் தமிழைத் திரைகடல் விழுங்கியது. கடைச் சங்கத்தில் சேந்தம்பூதனார், இளந்திருமாறன், சிறுமேதாவியார், அறுவுடையனார், பெருங்குன்றூர்க்கிழார், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிளநாகனார், கணக்காயர் மகனார் நக்கீரர், அரனர் முதலிய 49 புலவர் சிறந்து விள்ங்கினர். 449 பேர் பாடினர். முடத்திருமாறன் முதல், உக்கிரப்பெருவழுதியீறாக 49 மன்னர், 1950 ஆண்டுகள் ஆதரித்தனர். நெடுந்தொகை 400, நற்றிணை 400, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, கலி 150, பரிபாடல் 70, கூத்து வரி, பேரிசை, சிற்றிசை முதலிய பன்னூற்களைக் குவித்து உத்தர மதுரையில் கடைச்

சங்கம் பொலிந்தது. *நமது தமிழ் சுமார் 10090 ஆண்டுகளுக்கு முன்னதாகவே எண், எழுத்துகளுடன் பொலிந்தது. ஆ! எத்துணை நூல்கள் தமிழணங்கை அணியுறுத் திக் காலத்தால் விழுங்கப்பட்டன! எத்தனை மன்னர் கவியரங்கேறினர்! நாட கத் தமிழ்தான் எத்தனை நூல்களாகப் பாடப்பட்டது! குணநூல், கூத்தநூல், சயந் தம் நூல், பரதம், முறுவல் முதலிய நாடக நூல்கள் எங்கே? ஓவிய நூல், கணுநூல், பஞ்ச பாரதீயம் என்னும் இசை நூல், தருக்கக் கோவை, தாளநூல் முதலியவை எங்கே? எல்லாவற்றையும் தமிழ்ச் சோலையினின்று காலச் சூறாவளி அடித்துச் சென்றது. அவை நின்றதற்கு அடையாளமாக உரையாசிரிய ரின் சிற்சில மேற்கோள்களே உள்ளன. அகத்தியத்தின் சிற்சில பகுதிகளே எஞ்சியுள் ளன. தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத் துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, ஔவைத் தமிழ் முதலியவையே இப்போது தமிழருக்கு நிழல் தரும் பழஞ்சோலை மரங் கள். இடைச்சங்கத்தின் இறுதியில் கி.பி. 100 முதல் 600க்குள்ளேதான் ஐம்பெருங் காப்பியங்களும் பாடப்பட்டன. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, இம்மூன்றும்

---

* தலைச்சங்கம் 4440, இடை 3700, கடை 1950; ஆக 10090 ஆண்டுகள்.

பைந்தமிழ்ச் சோலையின் பழ மரங்களாக விளங்குகின்றன வளையாபதி, குண்டலகேசி எனுமிரண்டும் மறைந்து உரையாசிரியரின் மேற்கோளிலேயே உயிர்கொண்டுள்ளன. நீலகேசி, சூளாமணி, உதயணன்கதை, நாககுமார காவியம், யசோதரகாவியம் முதலியவையும் பாடப்பட்டது இக்காலமே. வாதவூரடிகளின் மனமலரில் திருவாசகமென்னும் தேன் ஊறியதும் இக்காலத்தேதான். இக்காலத்தில் சமணரும், புத்தரும், தமிழை அன்பூட்டிவளர்த்தனர். பிங்கலம், திவாகரம் என்னும் நிகண்டுகளும், அணியியல் என்ற அணி நூலும், முத்தொள்ளாயிரமும், சில ஆழ்வார்களின் பாசுரங்களும் இக்காலத்திலேயே பாடப்பட்டன. இதன் பிறகு சைவ, வைணவ ஆசிரியர்களால் தமிழணங்கிற்கு ஆயிரக்கணக்கான பாமாலைகள் தொடுக்கப்பட்டன. தேவாரத்திருமுறைகளும், நாலாயிரப்பிரபந்தமும், தமிழ்யாழில் அருளமுது பிழிந்தன. கற்றோர்க்கினிய கல்லாடம் பிறகு பாடப்பட்டது. நன்னூல், நேமிநாதம், அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பெருங்கலக் காரிகை முதலிய நூல்கள் இப்போது பாடப்பெற்றன. ௧௧-வது நூற்றாண்டில் குலோத்துங்க சோழனின் அரண்மனையை அலங்கரித்த கம்பர், புகழேந்தி, ஔவை முதலிய புலவர்கள் என்றும் இளமையுடனிருக்கின்றனர். அவர்களையும்,

அவர்களுக்குப்பின்னே பைந்தமிழ்ச் சோலையின் தோட்டக்காரராக இருந்தவரையும் பின்னே ஆராய்வோம். இக்காலத்தில் உதித்த 10000 கற்பகமலர்கள் பொலியும் கம்பராமாயணம், ஔவையின் நீதிநூல்கள், கலிங்கத்துப் பரணி, கந்தபுராணம், பெரியபுராணம், பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள், தண்டியலங்காரம், புகழேந்தி நளவெண்பா 425 முதலியவற்றை, அவ்வப்போது பின்னே ஆராய்வோம். கலி 4502க்குப் பின்னே தமிழ்ச்சோலையை வளர்த்த அதிவீராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன், தேசிகன், வில்லிபுத்தூரார், அருணகிரிநாதர், பரஞ்சோதி முனிவர், நல்லாப்பிள்ளை, கச்சியப்ப சிவஞான முனிவர் முதலியோரையும் பின்னே அறிவோம். இப்போது சென்றது போக எஞ்சி இலகும் தமிழ்சோலையுட்சென்று ஒவ்வொரு நூன் மரத்தின் பழச் சுவையையும் சிறிது அறிந்து செல்வாம்.

---

## சோலை எழில்.

நான் கண்ட பைந்தமிழ்ச் சோலை எல்லையற்றது; வேலியற்ற விரிபொழில்; எல்லாச் சமயத்தாரும் உல்லாசமாக வளர்வது. தன்னயத்துடன் "பிறர் என்னை ஓதத்தகுதியில்லை;

உயர்ந்த வகுப்பினரே ஓத வேண்டும்,'' என்னும் இறுமாந்த சொல்லற்று எவ்வினத்த வருக்கும் ஒவ்வியதானது. சைவப்பெரியார் தமிழுக்குரிய பண்ணில் தேவார திருவாசகங்களை முழக்குகின்றனர். பெரியபுராணத்தை அருமையாய்ப்படிக்கின்றனர். வைணவ ஆழ்வார்கள் திருவாய்மொழியை ஆர்க்கின்றனர். சமணர் ஜீவகசிந்தாமணியை ஆவலுடன் பயலுகின்றனர். புத்தர் மணிமேகலையில் மகிழாநிற்கின்றனர். கிறிஸ்தவர் வீரமா முனிவரின் தேம்பாவணியை வேட்கையுடன் கற்கின்றனர். முகம்மதிய சகோதரர் உமர்ப் புலவர் எழுதிய சீராபுராணத்தை ஆராய்கின்றனர். வள்ளுவரின் தெய்வ காவியத்தை வழிபடாதவரில்லை. கம்பர் கவிதையில் இன்புறுதவரில்லை. தான் இன்புற்றதைப் பிறரும் இன்புறச் செய்யும் இயல்பு தமிழரின் பெருந்தகை. தருகை நீண்டு அமிழ்தளிக்கும் தாயன்புடைய தனிமொழியே தமிழ்.* இனிமையே தமிழ். என்னு எண்ணங்களை இப்படியே விரித்துக்கொண்டேபோனால் வானையே காகிதமாயும் காலத்தையே எழுதுகோலாயுங்கொண்டு எழுதினாற்கூடத் தமிழின் பெருமை இன்னும்

---

* தமிழ் த்ராவிடம், த்ரமிடம், த்ரமிளம், தமிளம், தமிழ் என்று வந்ததெனச் சிலர் மிணமிணப்பர். அற்றன்று. தமிழ் தனிச்சொல்; தனிமொழி. அதற்கு இனிமை எனப் பொருள்.

எவ்வளவோ மீதியிருக்கும். ஆதலின் பைந்தமிழ்ச் சோலைக்குள் நுழைந்து பட்டதுபோக எஞ்சி நிற்கும் மரங்களின் தண்ணிழலில் உலவுவாம்.

## தொல்காப்பியம்.

அருந்தவர் எழுத்துச் சொல் பொருள் யாப்பணி வகுத்துத்தொகுத்து, அகத்தியன் ஆக்கிய அகத்தியம் காலக் கறையானால் அரிக்கப்பட்டுக் கிடந்ததைக் கண்டு நொந்தேன். கடலையுண்ட குடமுனி யிடத்தே, பொருந்தக் கற்றுப் புரைதப முணர்ந்த நல்லிசைப்புலவோன் தொல்காப்பியன் தமிழ் மொழிவாழத் தமிழ்ச்சுவை பரவ எழுத்துச் சொற்பொருள் இலக்கணஞ் செய்தான். இணையற்ற அத்தொல்காப்பியம் என் மனங் குளிரச் செழித்தே நின்றது. ஆனால் தமிழ்க் கவிதையை யெல்லாம் தன்னிழலில் அடக்கி நிவந்த அதன் இன்பத்தை நுகர்வார் மிகச் சிலரேயாயினர். இயலிசை நாடகத்தமிழை அகத்தியர் விரிந்த நூலாய் விளக்கினார். தொல்காப்பியர் இயற் றமிழையும், பெருநாரை, பெருங்குருகு முதலிய நூலுடையார் இசைத் தமிழையும், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்னும் நூலுடையார் நாடகத் தமிழையும் வகுத்தும், விரித்தும் மயக்கற முறைகாட்டித் தத்தம்

நூல்யாத்தனர். இளம் பூரணர், கல்லாடர் சேனுவரையர், நச்சினார்க்கினியார் முதலிய பெரியோர் அரிய உரை யெழுதிப் போற்றி வந்த தொல்காப்பியம் இப்போது தன்வழித் தோன்றிய பல சிற்றிலக்கணங்களுக் கிடையில் அறிபவர் மிகச் சிலராகத் தனித்திருக்கிறது. தொல்காப்பியனாரின் எழுத்தையுஞ் சொல்லையும் அறிவார் சிலரேனுமிருந்தனர். அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள், மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபு இயல்களுடன் கூடிய பொருளை அறிவார் விரல்விட்டு எண்ணக்கூடிய சிற்றெண்ணுடையராய் அருகிவிட்டனர். சங்க இலக்கியங்களெல்லாம் இத்தொல்காப்பியத்திற்கடங்கி நிற்றலால் இதன் வாயிலாகவே சங்க இலக்கியங்களுட் பொதிந்து கிடக்கும் பொருட் சுவையைப் போதியவளவு நுகரலாம். தொல்காப்பியர் வைத்து வளர்த்த இம்மாப்பெரும் தொல்காப்பியத்திற்கு எனது வணக்கத்தைச் செய்துவிட்டு பதின் மரங்கள் வரிசையாய் நடப்பெற்ற பத்துப்பாட்டுச் சாலையை அண்டினேன்.

## பத்துப்பாட்டு.

---

பத்துப்பாட்டின் பச்சிளங் காட்சி என் பார்வையைக் கவர்ந்தது.

"முருகு, பொருநாறு, பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோல்நெடு நல்வாடை கோல் குறிஞ்சி
பாலை கடாத்தோடும் பத்து." [பட்டினப்

என்ற பத்துப்பாட்டுகளின் பெயரைக்குறிக்கும் வெண்பாவைச் சொல்லிக்கொண்டே ஒவ்வொன்றையும் உற்று நோக்கினேன். திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், என்று பெயர் புனைந்து தமிழன்னையின் தங்கமுடியிற் பொதிந்து மின்னும் பத்துப்பாட்டுகளின் மலரடிகளைக் கண்ணிலொற்றிக்கொண்டேன்! நக்கீரர் போன்ற நல்லிசைப் புலவர்கள் அருளிச்செய்து சங்கப்புலவர்களால் தொடுக்கப்பட்ட ஒரு நூலை என் மொழியால் அணியுறுத்த முயலுவது வானவில்லிற்கு நிறஞ்சேர்க்க முயலுவதை யொக்கும். ஆதலின் சுருக்கமாக இப்பத்துக் கற்பகக் கனிகளின் சுவையை நுகர என் தோழரையும் அழைக்கின்றேன்.

இப்பாட்டுகளில் முருகன் பெருமையும் தமிழ் நாட்டின் வளமும், தமிழ் மன்னரின்

கொடையும், வீரமும், தமிழ் மூதூர்களின் பெருமைகளும், பேக்கன், பாரி, காரி, ஆய், அதிகன், ஓரி முதலிய வள்ளல்களின் வண்மைச்சிறப்பும், ஐந்திணை வளமும், கார், கூதிர் காலத்தன்மையும், மதுரையின் அழகும், கரிகாற் பெருவளவன், நெடுஞ் செழியன் முதலிய அரசர் திருவும், இல்லற முறையும், கற்பின் சிறப்பும், இயற்கைப் பொலிவும், இயம்பப் படுகின்றன.

## எட்டுத்தொகை.

எட்டுத்தொகையின் இன்பச்சாலை அடுத்து நின்றது. அதன் தண்ணிழலிற் சற்று நின்றேன்.

நற்றிணை, நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்,
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ
[டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை.

என்ற எட்டுத் தொகையின் தொகையைப் பாடிக்கொண்டே அருகு சென்றேன். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற பெயர் படைத்த எட்டுத்தொகை தமிழன்னையின்

வாகை மாலையாகும். இப்பாக்கள் பல பெரும் புலவர்களால் தொகுக்கப்பட்டன. தமிழ்நாட்டு மூவேந்தரின் வள்ளன்மையும், வீரமும், போர்த்திறனும், ஈகையும், அறனும், ஊரனும், கடல், வையையாறு, மதுரை முதலியவற்றின் அணியும், ஐந்திணைக்கு முரிய முதற்பொருள், கருப்பொருள், உருப்பொருள் களையும், தமிழ் வேந்தர் பலருடைய சரிதை களும் கொண்டு திகழும் எட்டுத்தொகை தமிழகத்திற்குப் பெருமை ஊட்டி நிற்கிறது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலிய எல்லா வகுப்பினரும் சேர்ந்து பாடித் தமிழுக்குச் சேர்த்த இப்பெருஞ் செல்வமான எட்டுத் தொகை வாழ்க!

இருமுந்நீர்க் குட்டமும்,
வியன் ஞாலத் தகலமும்,
வளி வழங்கு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றாங்கு,
அவையளந் தறியினும் அளத்தற்கரிய
அறிவும் ஈரமும் பெருங்கண் ணோட்டமுஞ்
சோறு படுக்கும் தீயோடு
செஞ் ஞாயிற்றுத் தெறலல்லது,
பிறிது தெறலறியார் நின்நிழல் வாழ்
[வோரே.

என்று பாடிக்கொண்டே பதினெண் அறச் செடிகளின் பூங்கொடிப்பந்தலை யணுகினேன்.

# பதினெண் கீழ்க்கணக்கு.

---

"நாலடி நான்மணி நானாற்ப தைந்
[திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி
[மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி
[யென்பவே
கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு."

அறம் பொருளின்பம் வீடென்னும் நான்கு பேறுகளையும் பெறும் வழியைத் தெள்ளிதின் உரைக்கும் அறநூல்களெனவே இவற்றைக் கூறலாம். இவற்றில் பெரும்பான்மையான நூல்களைத் தமிழர் இன்னும் பொதுவாக வழங்கி வருகின்றனர். திருக்குறளும், நாலடியாரும் தமிழர் சொல்லுக்கு உறுதியாக நிற்கின்றன. திருக்குறள் "ஞால முழுதும் நயந்தளந்து", அறவிளக்காகப் பொலிவதை யாரும் அறிவர். இனியவை, இன்னா இன்னவெனத் தெளிவுறச் சொல்லி நமது வாழ்விற்கு அறிவு புகட்டும் ஆசானைப்போல ஆகும், இப்பதினெண் கீழ்க்கணக்கின் சில கட்டளைகளைக் குறிப்பிடுவோம்.

அறிவு தெறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி,
உறுவ துலகுவப்பச் செய்து, பெறு
[வதனால்
இன்புற்று வாழ மியல்புடையார்
[எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

உண்மையான அறிவைத் தெளிந்து அடங்கி, தீவினையஞ்சி தனக்குவந்த வினையை உலகம் மகிழும்படி செய்து, கிடைத்ததைக் கொண்டு களிப்படையும் இயல்பினர் என்றும், துன்பமில்லாத வாழ்வை எய்துவர் என்றும் நாலடியார் சொல்லும் நெறியை நாடின், மக்களுக்கு வேறென்ன வேதம் வேண்டும்?

மானம் அழிந்தபின் வாழாமை முன்
[னினிதே;
தானம் அழியாமை தானடங்கி வாழ்
[வினிதே;
ஊனமொன் றின்றி உயர்ந்தபொரு
[ளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது.

என்று பூதஞ் சேந்தனாரின் இனியது நாற்பது கூறுவதைக் கருதுவாம்.

# ஐம்பெருங் காப்பியங்கள்.

பதினெண் கீழ்க்கணக்கின் அறிவொளி பற்றி ஐம்பெருங்காப்பியச் சாலைக்கு வந்தேன். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐந்து கற்பக மரங்களையுங் கண்டேன்! அவற்றில் இறுதி இரண்டு மரங்களும் பேரளவில்தான் இருந்தன. அவற்றின் அடிமரத்தில் சிறிய பங்கே தென்பட்டது. சிந்தாமணி தன் பொலிவில் நந்தாதிருக் கிறதெனினும், அதன் சுவையை அறிவார் அரியராகவே இருந்தது.

மல்கு பூங் கற்பக மரத்தின் நீழலான்
நல்குவான் ஒருவனை நயந்து நாடுமோ
பில்கு பூம் பிண்டியான் அமிர்துண்
[டார் பிறர்
செல்வங்கண் டதற்கவா சிந்தை
[செய்யுமோ?

கற்பக நிழலுடையான் பிறர் உதவியை நாட வேண்டுவதில்லை. அதுபோல, இறைவன் இன்பந் துய்த்தோர் சிந்தை பிறர் செல்வத்தை நாடாது என்று கூறும் சிந்தாமணிச் செய்யுள் நான் நின்ற தமிழ்க் கற்பகத்தை நினைவுறுத்தியது. ஜீவகன் புவிதரு

இன்பங்களை யெல்லாந் துறந்து, பைந் தமிழ்ச் சோலையினின்பத்திற் குளிப்ப தென்றே வென்ற உள்ளத்துடன் சிந்தாமணியைக் கடந்து சிலப்பதிகாரத்தை அடைந்தேன்.

ஆ! அதன் கவியும் கவினும், பொருளும் அணியும், எவ்வாறு என் உள்ளத்தை யிழுத்தன! "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே! அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே! அலையிடைப் பிறவா அமிழ்தே! யாழிடைப் பிறவா இசையே!", என்று புகழ்ந்து மகிழ்ந்தேன்! அதிலுள்ள, "கலையின தகலமும், காட்சி யின்பமும், வீணைச் செல்வமும், பெருந்தண் வாழ்க்கையும்," நோக்கி எனது காதல் மனத்தால் கொஞ்சினேன்! அதன் உரையாசிரியப் பெருந்தகையான அடியார்க்கு நல்லாரைத் தமிழுக்கு அரிய தொண்டு புரிந்தவரெனக் கொண்டாடித் தொழுதேன். யாழும் குழலும் தண்ணுமையும், விரியும், கூத்தும், பாட்டும் மல்கியிருக்கும் இச்செல்வச் சிலப்பதிகாரமே இன்னும் தமிழன்னையின் பொற் சிலம்பென என் செவிகளில் "கலகல" வென்று மணியோசை குலுங்குகிறது!.

இந்திர விழவூரெடுத்த காதை படிக்குங்கால் நகர்களின் அமைப்பும், அதிலுள்ள தொழிலாளிகளின் சிறப்பும் என்முன் நின்றன. கண்ணகியின் வீரச்சினம் எனது மனத்தை நடுக்கிக் கோமுறை பிழைத்த நாடு தீக்கிரையாகுமென்பதைக் காட்டிற்று. அப்பத்தினியின்மேல் எனக்குண்டான வணக்கம் வாய்காணாதது. கோவலனைக் கவர்ந்து கண்ணகிக்குத் துயரீந்த மாதவி மணிமேகலையுடன் நிற்கிறாள். அவளைப்பார்க்கச் சென்றேன். மாதவி இப்போது தன் மணிமேகலையுடன் ஐவகைச் சீலத்தமைதியுங் காட்டி, பற்றற்ற இன்பம் மூழ்கித் துறவுடன் பொலிந்தனள். மணிமேகலையோ

பிறத்தலும் மூத்தலும்
பிணிபட் டிரங்கலும்,
இறத்தலு முடைய
இடும்பைக் கோள்கலம்;
மக்கள் யாக்கை
இதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம்
விரும்புதல் புரிந்தேன்.

என்று உணவின் பிண்டமான மக்கள் யாக்கையிற் பற்றொழித்து பிறர்க்கறம் முயலும் பெரியோனான புத்தனடியிற் பணிந்து பேரின்ப மெய்தியிருந்தாள். தூய நிலையிற்

துறந்த, கற்பிற் கணியான மணிமேகலையை வணங்கினேன். அவள் காதையை விளக்கிய அருந்தமிழையும் தமிழ் நாட்டையும் வணங்கினேன். "விழாவறை காதையில்" முதுக்குடிப் பிறந்தோன் அறைந்த பறையுடனே என் ஆர்வமுரசும் முழங்கியதென்னே!

தமிழினி தோங்க! தமிழல காளுக!
தமிழிசை முரசந் தண்கடந் தெழுக!
தமிழ்க்கொடி மீது தண்ணவ னுறைக!
தமிழ்த்தாய் முடிமேல் தாரகை
[விளங்குக!
பிறமொழி கண்ட பெருமைக ளெல்லாம்,
திறமுட னேங்கித் தெய்வச் சுவையுடன்
அருளமு கொளிரும் அருந்தமிழ் வாழ்க!
தமிழகம் உலகத் தாயக மாகுக!
தமிழ்மொழி யுலகத் தாய்மொழியாகுக!
விழிமின்! எழுமின்! விரும்பித் தமிழைத்
தொழுமின்! உழைமின்! செழிமினே
[தமிழீர்!

என் மனக் கனவு இவ்வளவு துணிவுடன் பறைசாற்றியது! தமிழ் நாட்டில் பசியும், பிணியும், பகையும் நீங்கி, வளமும், வலிவும் அன்பும் பெருகுகவென்று வாழ்த்தி மேலே

சென்றேன். கூலவாணியச் சாத்தனார், மணிமேகலை பாடியதினின்று 'அக்காலத்தில் பசிக்காக எத்தொழில் புரியினும், மாந்தர் கல்விப்புலமையிற் சிறிதும் வேற்றுமையற்றுச் சிறந்திருந்தார் என்பதை யுணர்ந்து இக்காலத்தில் வீண் படிப்புப் படித்து உண்டியும் உடையுமே உகந்து, ஓடிடும் உலகோரைக் கண்டு இரங்கினேன். படித்தும் பிழைப்பின்றித் தவிக்கும் பலரைக் கண்டு பரிந்தேன்.

## கம்பன்.

---

இப்போது என் ஆவி, இன்பமே உருவான ஒரு விண்ணில் இருக்கிறது. கம்பச்சித்திரங் கண்டு தம்பித்தேன்! கம்பனின் பரந்து விரிந்து ஆழ்ந்த கவிச் சோலையில் நான் நுகர்ந்த இன்பத்தை யுரைக்க நீவிர் என்னை வற்புறுத்துவீர்களாயின், மறைகளும் புகலொணாத பரம்பொருளைத் தம் முட் கண்டவரின் மாப்பெரும் இன்பத்தைப் புகலும்படி காட்சியுள்ள பெரியோரை வற்புறுத்தலே உங்களை வேண்டுவேன். தமிழ்க் கடலில் தாலை நாட்டி, என்றும் இனிக்கும் பாட்டமுதைத் தந்த கம்பனை, என் கவித் தோழனுகக்கொண்டு அவன் அழகுசெய்த கவிச்சோலையிலேயே

எனது ஆவியை உலவவிட யான் எண்ணி யிருப்பதால் தனியாகக் கம்பச் சித்திரம் வரைகிறேன்.

சொற்கண்டார் சொல்லே கண்டார்;
சொற்கரும் பொருளின் செய்ய
பொற்கண்டார் பொருளே கண்டார்;
பொருளணி சுவைத்த வாயார்
கற்கண்டுந் தேனும் பாலுங்
கலந்ததெள் ளமுதுண் டின்னும்
எற்கொண்டு கம்ப னின்ப
மிசைப்பமென் றுரை கடந்தார்!

என்று பாடிக்கொண்டே புராண பவனத்திற் புகுந்தேன்.

## சைவ நூல்கள்

சேக்கிழார் வளர்த்த பெரிய புராண மெனும் அன்பலர் பூங்கொடியின் அரு ளழகை யென்னென்று சொல்வேன்! அறுபத்துமூன்று கிளைக் கொடிகளும் அருட் பணியுண்டு சிவம் மலர்ந்தன. அவற்றி டையே இடை, பிங்கலை, சுழிமுனை போன்று அப்பர், சுந்தரர், சம்பந்தக் கொடிகள் அருட்கனிகளாற் குலுங்கின. அறிவுத் தென்றல் தடவ, அன்பிலைகள் "சிவ சிவ"

வென்றன. அதன் வாடா நறுமலர்கள் தேவாரத் தேன் சொரிந்தன. ஒலிவடி வெடுத்த அமுதம்போலத் திருவாசகம் செவியிற் பாய்ந்தது; உள்ளத்தை யள்ளியது.

"அருளுடைச் சுடரே
யளித்ததோர் கனியே!
பெருந் திறல நுந்தவர்க் கரசே!
பொருளுடைக் கலையே!
புகழ்ச்சியைக் கடந்த
போகமே! யோகத்தின் பொலிவே!
தெருளிடத் தடியார்
சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே!
யிருளிடத் துன்னைச்
சிக்கெனப் பிடித்தேன்;
எங்கெழுந் தருளுவ தினியே!"

என்றுருகி மீது சென்றேன். பரஞ்சோதி முனிவர் வளர்த்த திருவிளையாடல் புராண மும், கச்சியப்பசிவாசாரியார் தேன் கவி பாய்ச்சிச் செழிப்பித்த கந்த புராணமும், இன்னும்பல தனிப்பாடல்களும், காள மேகம், ஒட்டக்கூத்தன், புகழேந்தி, ஔவைப் பிராட்டியார், வில்லிபுத்தூரார், பெருந்தேவனார், அதிவீரராமபாண்டியர், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் முதலிய பல

பெரியோர் வளர்த்து வாழும் கவிகளைக் கண் குளிரக் கண்டு, அமுதுகந்து, "அமுத மின்னும் எழும் எனும் ஆசையால்," மேலே சென்றேன். பசிதுயி லற்றது. இப்பைந் தமிழ்ச் சோலையின் நறுமணம் என்னுள் ஒரு இன்பவெறி யேற்றியது!

## இன்று.

தென்றல் மாறியது; அதன் மணத்தை யும் காணேன். வரண்ட காற்றுதான் ஆடிக்கொண்டிருந்தது. அந்தோ! நான் கண்டதென்ன! தமிழ்ச் சோலையின் பின் புறம் பாலையோ! ஒதுங்கக்கூட நிழலில்லை. வாவென்று அழைப்பாரும் இல்லை. இங்கு மங்கும் சிறுசிறு புதர்களே தென்படுகின் றன. சோலை யழகில்லை. செடி கொடி களின் குளிர்நிழல் இல்லை. புதர்களினிடையே மின்னும் கவிகள் பன்னலமுள்ளவேனும் அதைப் பொருட்படுத்துவார் ஒருவருமில்லை. பெரியோர் இருப்பினும் அறிவோரில்லை; துணைபுரிவோரில்லை. என்ன! இவண் ஆங் கில மாதோ உலவுகிறாள்! அவள் ஒளியில் தமிழ் நூல்கள் மீன்களானவே! மறுபடியும் ஆங்கில நெய்தற் சோலைக்கு வந்துவிட் டேனோவென மருண்டேன். பின்பு நான் தமிழ்ச் சோலையிலேயேதான் இருக்கிறேன்

என்ற நினைவு வந்தது. வீரத் தமிழர் வலிவிழந்து, தமிழ்க்குழலும் யாழும் மீட்டு வோரின்றி மண்ணிற் கிடந்தன. ஆங்கில மாதின் ஒய்யார நடையிலும், பசப்பு மொழி களிலும், மாயச்சிரிப்பிலும் நமது தமிழர் மயங்கினர்!

தமிழன்னை எங்கே! கம்பரையும் திரு வள்ளுவரையும் ஈன்ற எனது இன்பத்தாய் எங்கே? அந்தோ எங்கும் ஒளி பரப்பிய என் தாயைத் தேடியோ காணலாயிற்று. ஒரு இருள் மூலையில், வறுமையும் அடிமை யும் பிடித்து வற்றி எலும்பெடுத்த ஏழை கள் சூழ, முகங்குராவி இருக்கின்றனள் அன்னை. இப்போது அவள் இருப்பது அரியணையல்ல. சங்கப் பலகையல்ல. வெறுந்தரையில் ஆதாவின்றி இருக்கின்றாள். இருப்பினும் அவள் பிறரைக் கெஞ்சவில்லை. தன் பெருமையைக் குறைக்கவில்லை. கம்பனை முடியாய் வைத்துச் சிந்தாமணி யணிந்து, காலிற் சிலப்பதிகாரம் கலகல வென்ன, மணிமேகலை மேகலையாக, சங்க நூல்களெல்லாம் தங்க நகையாக, இன்னும் இளந்திருவணங்காகவே என் இதயத்தைக் கொள்ளைகொண்டு நின்றனள் தமிழரசி.

முழுமதி முகத்தில் முறுவலைக் காணேன்;
செழுந்திருக் கையில் செங்கோ லில்லை!
அருளிசை யிருந்தும் அறிவா ரில்லை!
பொருளிசை யிருந்தும் புகட்டுவா ரில்லை!
செஞ்சொ லுரைத்துஞ் செல்வாக்கில்லை!
அஞ்சும் பேதையர் அயலுக் கடியார்;
பிஞ்சிள மைந்தர் பிணங்கிப் பிரிந்தார்.
அருஞ்சுவை யளித்தும் அருந்துவோ
[ரில்லை!
வெறுஞ்சிடு மூஞ்சிகள் விரட்டுன ரிங்கே!
குடக்கிருந் தொருபுயல் குப்புறத் தள்ள,
வடக்கிருந் தொருபுயல் வாரி விழுங்கத்
தவிக்கிற ளென்னை புவிக்கினி தாகிய
கவிக்கட லமுதங் கையிற் பிடித்தே!
கொள்வா ரில்லை; கொடுப்பா ரில்லை;
எள்வார் பலர்முன் ஏங்கிநிற் கின்றள்!
அன்னை! அன்னை! அன்னை! அன்னை!
என்னை! என்னை! ஈன்றநற் றயே!
என்றடி சாய்ந்தேன்; ஏதுந் தோன்ற
நின்றேன்; வேறு நினைவுக ளிறந்தேன்!

எனது மூச்சையும், உடலையும் தமிழ்த் தாயின் அடியில் வைத்தேன். "என் மைந்தனே!" என்று என்னையவள் ஏற்றுக் கொண்டாள். என் பெரு மகிழ்வில் யான் என்ன உரைத்தேனென்பதை இப்போது சொல்லமுடியாது. இது கனவல்ல. பேரின்ப மின்னல்கள் என்னுள் தோன்றித்

தோன்றிப் பிறங்கின. "என் திருவே, செல்வமே, தேனே, தமிழே, அன்னையே!" என்று தொழுததுதான் என் நினைவிலிருக்கிறது. "அன்னையே உலகளாவிய உன்னொளியை உள்ளடக்கி இம்மூலையில் ஒடுங்கியதென்னை?" என்று ஆர்வமுடன் விளம்பி அழுதேன். அன்னை என் கண்ணைத் துடைத்துத் தன்னொளியைக் காட்டினாள்.

## புதுத் தமிழரசி.

அதுவே தனது வருங்கால வடிவு. ஆ! அதில் கண்டது என்ன! தன் பேருருவைக் காட்டிய கண்ணனுக்குள் அருச்சுனன் கண்ட காட்சியெல்லாம், நான் தமிழ்த் தேவியினிடம் கண்ட காட்சிக்கு எம்மட்டு! எல்லா அறிவின் எல்லையைக் கண்டேன்! பிற மொழி வியக்கும் பெருமொழி கண்டேன்! பிறமொழிக்கரிய பெருமையைக் கண்டேன்! தமிழே யுலகெலாம் தழைப்பதைக் கண்டேன்! செங்கோல் கண்டேன்! சீரெலாம் கண்டேன்! இன்பமே கண்டேன்! இறைவியைக் கண்டேன்! இக்காட்சி கண்டபிறகு தமிழை நான் மறப்பேனோ! தமிழன்னையின் தனியொளி உலகெலாம் பாவ அவள் புகழைப் பாடுவதையே எனது வாழ்வாகக் கொண்டேன். எனது அன்பை அறிந்தாள்

அன்னை. அவள் ஏற்றத்தை நாற்றிசையும் பரப்பத் திறமை கேட்டேன். அன்னை அருளினள்: "அன்பனே, என் சேயே! என்மொழி தன்னை தம் மொழியாக்கிய, மாந்தர் இந்நாள் மறந்தனர் என்னை! பிறமொழி பெரிதெனத் தாய்மொழி பேணார். என் பூந்தோட்டம் வாடி யுலர்ந்தது; ஆதர வளிப்பார் அரியர் ஆனார். தேயத்திற்கே என் மொழி தன்னை, ஒரு மொழியாக்க உளமொடு முயலின் வெற்றியோங்கும். முன்னாளெல்லாம் முது புகழ் சிறந்தேன். என் இன்னிளம் பெருமை இன்னும் எழி லும். ஆங்கில மாதின் அன்பும் பூண்டு, மேனாட்டழகி மினுக்குங்கொண்டு, அவள் கண்டெடுத்த இயலறிவிற்குத் தமிழணி பூட்டித் தம்மதாக்குமின்! தொல்மொழி எல்லாம் தோழமை பூண, பல்மொழிப்பூவின் பசுந்தேனுண்டு, தமிழை யூட்டித் தழைத் திடச் செய்மின். பூவுலகொளிரும் புத் துயிர்க் கேற்ற பாவலர் பலரும் பரந்து தோன்றுவர். அவரை மனத்தொடும் ஆத ரித்திடுமின். கவியுங் கலையும் கவினும் எழிலும் புவியெலாம் ஒளிரப் பொருந்தி முயலுமின். ஒற்றுமை யுறுமின்; உள்ளத் தொன்றுமின். வேற்றுமை வேரை வெட்டி யெறிமின்; அன்பாலணைமின்! அருளாற் காண்மின். அறிவால் ஆற்றல் நிறைமின் மைந்தர்காள்! புவியினிலின்றென் புக

மொளி மங்கித் தவிக்குனர்; தாய்க்குத் தனயர் இரங்குமின்! தவ வலிவாலே தமிழ் வலிவடையும்! நற்றமிழ் வாழவே நற்றவம் புரிமின்!

தமிழன்னையின் சொற் சுருக்கத்தை என்னுயுள் முழுதும் எண்ணிப் பணிசெய்ய உறுதி பூண்டு பைந்தமிழ்ச் சோலைக்கு என் ஆவியை வார்க்க எழுந்தேன். அதுவே எனது அருந்தவ முயற்சி. என் நேசரையும் கூவி யழைக்கிறேன். "அன்பர்காள்! நமது தமிழ்மொழி தனி மொழி. அள வற்ற பெருமையுள்ளது. நமக்குக் கடவுட் டன்மையைத் தரக்கூடியது. நமது அறி யாமையால் தமிழின் ஆற்றலை அறியாது வீணாகக் குறை கூறுகிறோம். நாம் முயன்றால் அறிவுநூல் கடலைத் தமிழ் வங்கத்தைக் கொண்டு கடக்கலாம். உலகிற் பிறந்துள்ள புத்துயிர்க்கேற்பப் பல நூல்களைச் செய்தும், அறிவு நூல்களெல்லாம் தமிழில் எழுதித் தமிழைப் பெருக்கி ஆங்கிலத்தின் முன்னே பெருமையுடன் நிற்கும்படி செய்வோம். தமிழ் ஓவியத்தை அணியுறுத்தும் அமுதக் கோல் நமது துணிந்த முயற்சியே; ஆக லின் தமிழுக்கு உழைக்க எழுமின்! தமிழின் அருமையைப் பிறமொழியினர் அறியச் செய்மின். தமிழைக் கற்க உலகில் பேரவா பிறக்கச் செய்மின்! பிறமொழிகளை இக

ழாது தமிழையே நேசித்து வாழுவோம்.
தமிழ் தமிழென வுயிர்ப்போம்!

என் அழைப்பைக் கேட்டோர்களெல்லாம் பைந்தமிழ்ச் சோலையை வளர்க்க என்னுடன் வருவார்களென நம்புகிறேன். பைந்தமிழ்ச் சோலையில் ஒரு தோட்டக்காரனாவதே என் வாழ்க்கைப் பணி. "என் கடன் பணிசெய்து கிடப்பதே."

# ௨. சோலை செழிக்க வேலை.

வாருங்கள், பாடுபடுவோம், பணிசெய்வோம். சாதி, சமய, சாத்திரகோத்திர வேறுபாடுகளை மறப்போம். எல்லாரும் ஒரு தாயின் குழந்தைகள் என்று நினைப்போம். வீட்டிற்கு உழைப்பதுபோலவே, கருத்தூன்றி நாட்டிற்குத் தொண்டு செய்வோம். தமிழ்நாடே தமிழர் கோயில். அதைச் செல்வச்சித்திர மணிமந்திரம் ஆக்குவோம். இக்கோயிலுக்குள் இனி எவ்விதமான வகுப்பு, வருணம், மதம், சாதிச் சண்டைகள் கூடாது. இதில் எல்லாம் வல்ல சுத்தசக்தியை அறிவாலும், அன்பாலும் வழிபடுவோம். இத்தமிழ்மந்திரத்தில் தமிழம்மையின் திருவுருவை நாட்டுவோம். நமது ஒன்றுபட்ட அன்பு-வாழ்வை அவளுக்கு அர்ப்பணிப்போம். பண், பனுவல், பரதம், கூத்து, சொல், பொருள், கல்வி, கேள்வி, தொழில், சிற்பம், சித்திரம், முதலியவற்றால் நாளும் வழிபடுவோம். "எந்தாய் வாழ்க," என்று மந்திரம் சொல்வோம். சுத்த, சுதந்திர, ஸமத்வ வாழ்வால் சக்திக் கனல் வளர்ப்போம். அறவோர்களே, வாருங்கள்! "எல்லாவுலகிற் கிறைவ னொருவன், எல்லா உடலும் இறைவ னிலயமே," என்று

முழக்குங்கள்! அன்பு, உண்மை, இன்சொல், ஈகை, அமைதி, உடலுறுதி, உள்ளுறுதி, தன்னறிவு, உலகறிவு, சுத்தமுக்தஸமத்வ வாழ்வு—இவற்றைப் புகலுங்கள், பயிற்றுங் கள்! மனிதவாழ்வு தெய்வவொளிபெற, ஸத்ய தர்ம ஸாதனமாகுக! அருட்பாக்கள், கதை, நாடகம், விளக்குப் படங்களால் சுத் தான்ம வாழ்வைப் பொது ஜனங்களுக்கு விளக்குங்கள். கள், சூது, விபசாரம், வீண் வழக்குகளை நீக்குங்கள். கிராமந்தோறும் சென்று பணிபுரியுங்கள். அறிவாளிகளே, வாருங்கள்! அல்லும் பகலும் வேலையுள் ளது. உங்களுக்கு இயல்பாக எந்தத்துறை யில் புலமை உள்ளதோ, அதில் முழுமை பெறுங்கள். கற்ற பயனைக்கொண்டு தமிழ் மந்திரத்தைப் பெருமைப்படுத்துங்கள். தமிழை உயிர்போலப் போற்றுங்கள். ஆரி யம், ஆந்திரம், ஹிந்தி, வங்கம், மராத்தி, அர்பி, உருது, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மன், லத்தீன், கிரேக்கு, பார்ஸீ, ஜப்பானியம், சீனம் முதலிய மொழிகளை அவரவர் விருப் பத்திற்கேற்றபடி பயிலுங்கள். அதில் எதெது அருமையோ, சுவையுள்ளதோ, பயனுள்ளதோ அதைத் தமிழாக்குங்கள். தமிழ், ஆரியத்தில் உள்ள சாத்திரங்களை ஆராயுங்கள். மேனாட்டில் முன்னேற்றம் அடைந்துள்ள பூதபௌதிக, யந்திர சாத்தி ரங்களை நன்றாகப் பயிலுங்கள். அங்கு நடக்

கும் ஆரிய தொழில்களை அக்கரையுடன் பயிலுங்கள். அவற்றில் புலமை பெற்றவர் தமிழில் அப்படி சாத்திரங்கள் ஆக்கி அவற்றை இளந்தமிழருக்குப் பயிற்றி அறிவைப் பரப்புங்கள். மானமாய்ப் பிழைக்க ஒரு யோக்கியமான தொழில் தெரியாதவன் தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது. பிறரைச் சுரண்டி, உழைக்காது தொந்திவளர்க்கும் செல்வச் சோம்பேறியும், இங்கு கூடாது. ஒவ்வொரு கையும் நாளைக்கு நான்குமணி நேரமாவது இயல்பான உழைப்பினுல்தான் உண்ணவேண்டும். மூளை, குரல், விரல், உடல் உழைப்பிற்குத்தக்க கூலி யமைக்க வேண்டும். உழைத்து உண்டநேரம்போக மீதியை, கலைவளர்ச்சி, பொதுநலப்பணி, தர்மசாதனங்களில் செலவிட்டு வாழ்வை யோகமாக்கவேண்டும். அமைதி, அழகு, இன்பம், சக்தி, ஞானம், சுதந்தரிலை, இவையே பூரணவாழ்வின் ஆறு அங்கங்கள். காலைக் கதிரின்முன் ஒருமணி, அந்தியில் ஒருமணி, உள்ளடங்கி தியானித்து வந்தால் இந்த சித்திகள் நாளடைவில் உண்டாகும். ஒரே காலத்தில் நாடு முழுதும், தமிழ் சிறக்க வேண்டும், தமிழர் அன்புபெருகி ஒன்று பட்டு வாழவேண்டும், நாடு விடுதலைபெற வேண்டும் என்று தியானித்து வந்தால் அவ்வாறே நடக்கும். அத்துடன் அயராது உழைக்கவேண்டும்,

அறிவாளிகளே, வாருங்கள்! பெரிய தமிழாலயம் அமைப்போம். ஊர்தோறும், கிராமந்தோறும் அதன் கிளைகளை நாட்டி, ஒவ்வொரு வீட்டிலும் அறிவும், தொழிலும், ஆற்றலும், அழகும், உள்ளன்பும், ஒற்றுமையும், சுத்தான்ம சக்தியும் ஒளிரச்செய்வோம்.

## தமிழாலயம்.

---

இதில் தமிழ் உலகளாவிப் பரவ, பல கலைச் சங்கங்கள் நடக்கும். ஒவ்வொன்றும் சுமார் 50 புலவர் மணிகளின் பொறுப்பில் வேலை செய்யும்.

(க) மொழிப்பகுதி. இது வெப்ஸ்டர், லாரூஸ், என்ஸைக்ளோபீடியா போன்ற தமிழ்ப்பேரகராதி தயாரிக்கும். அதில் தமிழ்மொழிகளுடன் தமிழ் வளர்ச்சிக்கு வேண்டிய மேற்கு நாட்டு, கிழக்கு நாட்டு மொழிகளும், அருங்கலை விளக்கங்களும், இயலறிவு விளக்கங்கள், உலகப் பெரியார் வரலாறுகள், பலநாட்டு வரலாறுகள் எல்லாம் படங்களுடன் காணும். இயல், இசை, நாடகத்தமிழ் இலக்கணங்களைப் புதிய முறையில், தெளிவான வசனநடையில் தயாரிக்கும்.

(உ) இலக்கியப்பகுதி. கவிதை உரை நடைகளில் நல்ல புலவர் எழுதிய நூல்களைத் தக்கபடி வெளியிடும். பழஞ்சுவடிகளைப் புதிய ஆராய்ச்சிகளுடன் பதிப்பிக்கும். பல மொழிகளிலும் புகழ்பெற்ற இலக்கியங்களை மொழிபெயர்க்கும். புதியபுலவர் நூல்களை நன்மதித்து, வெகுமதித்து வெளியிடும். சரித்திரம், பூகோளம், ரஸாயினம், பௌதிகம், தத்துவம், தாவரம், உயிர்நூல், ஒளிநூல் ஆராய்ச்சிகளைச்செய்து எல்லாத்துறைகளுக்கும் வேண்டிய சாத்திரங்களை சிருட்டிக்கும். இதற்கேற்ற புலவர்கள் மேனாடு சென்று தேர்ச்சிபெற்றதுடன், தமிழ், ஆரியத்திலும் தேர்ச்சிபெற்றிருப்பர்.

(ங) நுண்கலைப்பகுதி. இதில் கைதேர்ந்த அருங்கலைமணிகள் அங்கம் வகித்து பாட்டு, ஓவியம், சிற்பம், நாடகம், அழகுக் கலைகள், கணிதம், யந்திர நுட்பம், சுரங்கம், தொழில்கள், சாத்திரங்களில் புதுப்புது ஆராய்ச்சிகள் செய்து "கலைவாணி" என்ற ஒரு அழகிய சித்திரப் பத்திரிக்கையாக வெளியிட்டு நூல்களாகக்கட்டி உதவுவர். தமது கலைகளைத் தக்கார்க்குப் பயிற்றி கலையாசிரியர்களைத் தயாரித்து ஊர்தோறும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி மாணவர்களைப் பழக்குவர்.

(ச) நல்வழிப்பகுதி. தியாகிகளும், தத்துவ வித்தகரும், மருத்துவரும், யோகிகளும் இதில் அங்கமிருப்பர். தர்மசாதன நூல்களை ஆராய்ந்து வெளியிட்டு ஊர் தோறும் அறவோர் திருக்கூட்டத்தைக் கொண்டு பிரசாரம் செய்வர். மனிதவாழ்வு சுத்தமுற்று, வறுமை, மடமை, அடிமைத் தனங்களினின்று விடுதலைபெற்று, சாதிசமய வாதங்களின்றி சுத்தாத்ம ஸமரஸத்தில் வாழ்ந்து தெய்வநிலை பெறும் அத்யாத்ம யோகத்தை அனுபவ வாயிலாக இவர்கள் உபதேசிப்பர். ஆங்காங்கு ஆசிரமங்கள் அமைப்பர். உடலுறுதி—மனஉறுதியுடன், மாந்தர் அறம் பொருள் இன்பம் வீடு பெற்று தர்மவீரர்களாக வாழச்செய்வர். சுகாதார நெறிகளைத் தக்க கருவிகள் கொண்டு பரப்புவர். ஸமூகத்தில் புகுந்த தீமைகளை விலக்கி நல்ல சீர்திருத்தங்கள் செய்ய அயராது உழைப்பர். இக்கழகத் தொண்டர் பெரும்பாலும் பிரமச்சாரிகளாகவே யிருப்பர்.

(ரு) வீரப்பகுதி. நாட்டின் காவலுக்கும், பொதுநலத்தொண்டிற்கும் தர்மவீரர்களைப் பயிற்றும்.

(சு) தொழிற்பகுதி. ஏற்ற தொழிலாளிகளைக்கொண்டு, உப்புமுதல் கற்பூரம் வரையில், குண்டூசி முதல் ஆகாயவிமானம் வரை

யில், நாட்டின் தேவைக்கேற்ற எல்லாச் சாமான்களையும் தயாரிக்கும். பயனுள்ள யந்திரங்கள் செய்யும். குடிசைத்தொழில் களை அணிவகுத்து நடத்தும்.

(எ) வேளாண்மைப்பகுதி. நாட்டு உணவு உடை, தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய பயிர்களை விளைவித்து, உழைப்பிற் கேற்ற பிழைப்புதவும்.

(அ) பொருளாதாரப்பகுதி. எல்லாத் தொழில்களுக்கும் வேண்டிய பொருளுதவும்; நாட்டில் செய்த சாமான்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்றுப் பணமாக்கும்; ஐக்கிய நாணயக் கடைகள் ஏற்படுத்தி ஊர்தோறும் உழைப்பாளிகளின் சாமான்களை வாங்கி, பிழைப்பிற்கு வேண்டிய சரக்குகளை உதவும். தொழிலாளிகளுக்கு விற்பனைக்கவலையில்லை. தரைவாணிபமும், கப்பல் வாணிபமும், இந்தப்பகுதியைச்சேர்ந்தது.

(கூ) கல்விப்பகுதி. ஊர்தோறும் நல்ல கலாசாலைகள் அமைத்து தக்க ஆசிரியரைக் கொண்டு, அறிவொளி பரப்பும் ஆசிரியர்களைத் தயாரிக்கும். பாடப்புத்தகங்களை எழுதி வெளியிடும். அச்சுக்கூடங்கள் நடத்தும்; பத்திரிக்கைகள் படங்களுடன் எல்லாருக்கும்

பயனுகும்படி வெளியிடும். மூலாதாரக்கல்வி இனும். தமிழ், இந்தி, பழக்கத்திற்கு வேண்டிய ஆங்கிலம், கணக்கு, பூகோளம், நாட்டுவரலாறு, உடற்பயிற்சி, தர்மசாதன விளக்கம், 7 முதல் 12 வயதுமட்டும் ஆண் பெண் யாவரும் பயில்வர். பிறகு அவரவர் இயல்பிற்கேற்றபடி ஒரு துறையில் 5 ஆண்டு கள்பயின்று புலமை பெறுவர். இலக்கியம், இசை, ஓவியம், நாடகம், சிற்பம், மருத்து வம், வேளாண்மை, காடுகாப்பு, நீர்ப்பாச னம், வீடமைப்பு, பொருளாதாரம், வாணி பம், பணக்கடை, கப்பல், பத்திரிக்கை, மின்சாரத்தொழில், சட்டத்தொழில், நுண் கலை முதலிய அனைத்திலும் அவரவர் திறமை க்குத் தக்க தேர்ச்சிபெறக் கல்விப்பகுதி துணை செய்யும்.

(ய) அரசியல்பகுதி. தமிழ் வழங்கும் ஜில்லாக்களை தமிழ் நாடாக வகுத்தல், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் ஆகிய திராவிட தேசங்களை திராவிட மகா நாடுகள் கூட்டி ஐக்கியப்படுத்தல்; கிராமப் பஞ்சாயத்துமுதல் நாட்டு நிர்வாக சபை வரையில் ஐந்தன் முறையில் தேர்ந்தெடுத்து, கல்வி, தொழில், சுகாதாரம், காவல், நீதி முதலிய பொதுக் கடன்களை முறைவகுத்து ஆற்றல்; அதற்குவேண்டிய செலவுகளை வரியாக வசூலித்தல்; திறமையுள்ள வாலிபர்

களை பிறநாடுகளுக்கு அனுப்பி நாட்டிற்கு அவசியமான தொழில்களில் தேர்ச்சிபெறச் செய்தல்; தாம் செல்லும் நாடுகளில் நாடகம், ஓவியம், சொற்பொழிவுகளால் தமிழ்க்கலை பரவச்செய்தல். பயிற்சிபெற்ற மாணவருக்கு முதல் கொடுத்து சுதேசித்தொழில் நடத்தச்செய்தல், நாட்டில் வீரர்களை உண்டாக்கல், நாட்டில் ஒற்றுமை ஏற்படுத்தல், "நான் தமிழன், தமிழர் எனது கூட்டம், தமிழ்நாடு எனது கோயில், தமிழன்னை எனது தெய்வம், தமிழ்ப்பணி எனது மூச்சு, தமிழர் நலம் எனது சமயம், என் மந்திரம், எந்தாய் வாழ்க, எங்கெங்கு இருப்பினும் தமிழ் மொழியாளரும், தமிழன்பரும் எனது உடன்பிறந்தார்," என்னும் உணர்ச்சி ஒவ்வொரு தமிழன், தமிழியின் உள்ளத்தும் ததும்பச்செய்தல், தமிழின் பெருமைக்காக தமிழர் வாழச்செய்தல் முதலியன, அரசியல் பகுதியின் வேலை.

இவையெல்லாம் நடக்கிறகாரியமா, ஏதோ வசந்தக் காதலியின் வான்கனவா யிருக்கிறதே என்று எண்ணலாம். ஜப்பான், பிரான்சு, அமெரிக்கா போன்ற நாடுகள் இவ்வாறு ஒற்றுமையாக முன்னேறியுள்ளன. நமக்கும் அது இயலும், இயலும், இயலும்; சக்தி இருக்கிறாள்! நிறைவேற்றுவாள்! ஒரேடியாக இதெல்லாம் நிறைவேற்றச் சொல்லவில்லை.

முதலில் சுமார் ஆயிரம் ஏக்ரா நிலத்தில், ஆயிரம் அன்பர்கூடி இத்தகைய பூரண வாழ்வை நிலைநாட்டவேண்டும். அந்த தர்ம வீரர் சங்கம், தனது சுத்தசுதந்திர ஸமத்வ சக்தியால் மென்மேலும் வளர்ந்து நாளடைவில் நாடளாவும். இதன் நடைமுறைகள் முற்றும் தர்மஸாதனத்தில் விளக்கப்பட்டுள்ளது காண்க!

புதிய தமிழுலகைத் தோற்றுவோம்!—தமிழ்ப்
புதல்வர் அருட்பணிகள் ஆற்றுவோம்!
முதிய நலங்களெல்லாம் போற்றுவோம்!-இன்று
முளைத்த அருஞ் சுவைகள் கூட்டுவோம்!
சுதந்திர ஒற்றுமையை நாட்டுவோம்!-தெய்வச்
சுடரால் வாழ்வின் விளக் கேற்றுவோம்!
நிதமும் அமரநிலைக் கேட்டுவோம்!—எந்தாய்
நீடுவாழ் கென்று வெற்றி கொட்டுவோம்!

ஓம் சுத்தசக்தி.

---

(சுத்தானந்த பாரதி.)

65154

ஓம் சுத்த சக்தி.

# அன்பு நிலையம்.

---

(விதி நியமங்கள்).

---

தமிழ், தமிழர் தமிழ்நாடு, செழித்தோங்கும் பணிகளையே வெளிப்பகட்டின்றிச் செய்தல். எல்லார்க்கும் உள்ளன்பு காட்டல். சாதி சமய வேறுபாடின்மை. தனது உணவு உடைத் தேவைக்குத் தூயவழியில பொருளீட்டி, அதிலொருபங்கு தமிழ்ப்பணிக்சாக மிகுத்துதவல்; உலகின் இசை வசைகளைப் பாராட்டாது செய்யுந் தொழிலை, அப்பர் உழவாரத் தொழில் செய்தாற்போல கர்மயோகமாகச் செய்தல். பூரண தெய்வ நம்பிக்கையுடன், காலை மாலை ஒருமணி நேரமாவது மனத் தூய்மையுடன் இறையை வணங்கிச் சிந்தித்தல். சுத்த, சுதந்திர, ஸமத்வ நிலைபெற்று தெய்வத்தன்மை ஓங்கவே இயன்றவரை ஸாதனஞ்செய்தல்.

தமிழ், தமிழர் முன்னேற்றங்கருதி ஆண்டிற்கொரு அன்புமலர் வெளியிடல். அதன் விற்பனையை நிலயச் செலவுகளுக்கு ஈடுகட்டல். மனச்சாட்சிக்கு அஞ்சி நடத்தல். மிகவும் தன்னலமற்ற பணியாளரே தேவை. விபரம் விழைவோர் நிலயக்காரியதரிசிக்கு எழுதுக.

---

*Secretary,*
**ANBU NILAYAM,**
**No. 11, Tank Road,**
**SINGAPORE. (S.S.)**

உ

# கம்பக் கவியின்பம்.

(அச்சில் உள்ளது.)

(சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியது.)

## மிகவும் அரிய ஆராய்ச்சிநூல்

(6-பாகங்கள்)

**1. கம்பன் வரலாறு.** கவி நுணுக்கம், கம்பனும் உலக மகா கவிகளும், கம்பச் சித்திர விளக்கம், இராமாயண தத்துவம், வால்மீகி, துளஸிதாஸ், வாக்குகளும் இடை யிடையே காணும். ஷேக்ஸ்பியர், காளிதாஸன் போன்று நாடகப் பாங்கில் கம்பன் முழுதும் வெளி வருகிறது.

**2. இராமன் துறவு.** பாலகாண்ட விமர்ஸனம், திருக்கல்யாணம், கைகேயி ஸாகஸம், தசரதன் தவறு, வனம் புகல், குகன் அன்பு, சித்திரக்கூட வாழ்வு. பரதன் விரதம், பாதுகா பட்டாபிஷேகம்.

**3. மாயமான்.** விராதன் வதை, பஞ்சவடி வாசம், சூர்பணகை காதல், மாரீச மான், சீதா லக்ஷ்மண ஸம்வாதம், இராவண ஸந்யாஸி, இராமன் சோகம், அயோமுகிக் காதல், கபந்தவதம், சபரியன்பு.

**4. திராவிடர் நட்பு.** அநுமான் காக்ஷி, சுக்ரீவன் கதை, மராமரம் துளைத்தல், வாலிப்போர், தாரையும் அங்கதனும், ஸுக்ரீவ ராஜ்யம், கால வர்ணனை, சீதையைத்தேட கிஷ்கிந்தை திராவிட சேனை புறப்படுதல்.

**5.** வீரமாருதி. கடலைத் தாண்டல், ஊர் தேடல், அசோக வனம், சீதையின் ஸத்யாக்ரஹம், இராவணன் மோகம், சீதை அரக்கனைத் துரும்பாக மதித்தல், அனுமான் கணையாழி தருதல், ஆழி கண்டதேவி, அனுமனும் சீதையும், சூளாமணி தருதல், அனுமார் வீரம், அசோகவனம் அழிதல், அரக்கரை மடித்தல், இராவணன் முன் இராம தூதன், இலங்கைத்தீ, வீரன் வெற்றி, கண்டேன் சீதையை, போர்ப்படை எழுச்சி.

**6.** இராவண ஸபை. அரக்கன் செருக்கு, அசுரநீதி, விபீடணன் நல்லுரை, வீடணன் அடைக்கலம், சேதுபந்தனம், அரக்கர் படையணி, சுக்ரீவன் வீரம், அங்கதன் தூது, இலக்ஷ்மணன் வீரம், நாகபாசம், இந்திரசித்தன், மாயா சீதை, நிகும்ப யாகம், இந்திரசித் வதம், மூலபல வதம், ராமபாணம், ஸமய ஸஞ்ஜீவி, அகத்தியர் சூர்ய மந்திரம் உபதேசித்தல், இராவண வதம், விபீஷண பட்டாபிஷேகம், இராம பட்டாபிஷேகம், ராம ராஜ்யம்.

இவ்வளவும் உங்களுக்கு ரூபாய் **6**-ல் கிடைக்கும். இப்போதே முன்பணம் செலுத்துவோருக்கு எல்லாப்பாகமும் ரூபாய் **5**-ல் தரப்படும். தபால் செலவு வேறு.

---

காரியஸ்தன்,

**அன்பு நிலயம்,**

நே. 11, டாங்க் ரோட்டு,

சிங்கப்பூர். (S. S.)

# ஜனமித்ரன்.

(ஓர் உயரிய தமிழ் வாரத் தாள்.)

தமிழ், தமிழர் முன்னேற்றத்திற்கே உழைக்கிறது. சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்களின் கட்டுரைகளை ஆர்வமுடன் வாரந்தோறும் தவறாது வெளியிடுகிறது. சிறந்த தேசபக்தரும், நல்ல அறிவாளியும், உயர்ந்த தமிழபிமானியு மாகிய ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய ஐயர் அவர்களை ஆசிரியராகக் கொண்டது. இதன் வருஷ சந்தா:—

உள்நாடு ரூ. **6.** வெளிநாடு ரூ. **6.**

மானேஜர்,
"ஜனமித்ரன்" அச்சகம்,
புதுக்கோட்டை S. I. R.
தென் இந்தியா.

---

# THE YOGA OF SRI AUROBINDO

— BY —

## Swami Shuddhananda Bharatiar:

Besides being a clear and Concise treatise on the universal, synthetic Yoga of Sri Aurobindo, the volume contains a practical account of all the systems of Indian Yogas.

Price $1.60 (Postage extra).

**Can be had of**

*Secretary,*
**ANBU NILAYAM,**
**No. 11, Tank Road,**
**SINGAPORE. (S.S.)**